<u>ஓய்வூதியர்கள் கவனத்திற்கு</u>

ஓய்வூதியர்களுக்கான குறை தீர்வு கூட்டம் புதன்கிழமை தோறும் பிற்பகல் 3 மணியளவில் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் வளாகத்திலுள்ள மாவட்டக் கருவூலத்தில் கருவூல அலுவலர் தலைமையில் நடைபெற்று வருகிறது. எனவே, விருதுநகர் மாவட்டக் கருவூலம் மற்றும் இதர சார்நிலைக் கருவூலங்கள் மூலமாக ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்கள் தங்கள் ஓய்வூதியப் பலன்களைப் பெறுவதில் ஏதேனும் குறைகள் இருப்பின் இடைத்தரகர்கள் யாரையும் அணுகாமல் தாங்களே நேரடியாகக் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விருதுநகர் மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறும் மொத்த ஓய்வூதியர்களில் 90 சதவீதம் பேர் மே-2016 இறுதி வரை நேர்காணலை முடித்துள்ளனர். மீதமுள்ள ஓய்வூதியர்கள் ஜுன்-2016-ம் மாத இறுதிக்குள் சம்பந்தப்பட்ட கருவூலங்களில் நேர்காணலுக்கு ஆஜராகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மத்திய அரசு ஓய்வூதியம் பெறும் அனைத்து ஓய்வூதியர்களும் தங்களது ஆதார் அடையாள எண்ணை ஓய்வூதியக் கணக்குடன் பதிவு செய்து வீட்டிலிருந்தபடியே வாழ்நாள் சான்றினை (Life Certificate) சமர்ப்பிக்கும் வசதியினை பெறும்பொருட்டு அனைத்து வங்கியிலும் மே 30ம் தேதி முதல் ஜுன் 10ம் தேதி வரை நடைபெறும் சிறப்பு முகாமில் கலந்து கொண்டு பயனடையுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேலும், மாநில அரசு ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களும் தங்களது ஆதார் அடையாள எண்ணினை ஓய்வூதியக் கணக்குடன் பதிவு செய்து தாங்கள் இருக்கும் இடத்திலிருந்தே www.jeevanpramaan.gov.in என்ற இணையதளத்தின் வாயிலாக தங்களுடைய வாழ்நாள் சான்றினை (Life Certificate) சமர்ப்பிக்கும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

08/06/16

கருவூல அலுவலர்,
விருதுநகர்